அ.வ.எண்: 104/2014 நாள்: 10.04.2026

வா.சா.4 – சுதாகரன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் அடையாள அட்டை சரிபார்க்கப்பட்டது.

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:**

1. தாவா சொத்துக்கள் சம்பந்தமான 1959 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரையிலான வருவாய் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேனா என்றால், 1980 களுக்கு பிறகான ஆவணங்கள் தான் தாலுகா ஆபீஸில் வைத்திருப்போம், அதற்கு முன்பே ஆவணங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆவண காப்பகத்தில் தான் வைத்திருப்போம். அதனால் 1959 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரையில் தாவா சொத்து சம்பந்தமாக எதன் அடிப்படையில் பெயர் மாற்றம் ஏற்பட்டது என்று என்னால் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரிதான்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

கப்பலூர் குரூப் கேசனி கிராமத்தில் சர்வே எண் 95/3 தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் அது உட்பிரிவு செய்யப்பட்டு நாகப்பன் மனைவி காந்திமதி என்பவர் பெயரில் உள்ளது. நான் என்ன ஆவணம் கொண்டு வந்தேன் என்றால், A ரிஜிஸ்டர் மற்றும் யூடிஆர் ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சர்வே எண்.104/1 யார் பெயரில் உள்ளது என்றால் காந்திமதி பெயரில் உள்ளது. பொதுவாக முறையான ஆவணங்கள் சமர்ப்பித்து இருந்ததால் தான் ஒரு நபர் பெயரில் சொத்துக்கள் பெயர் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான்.

**<u>வாதி தரப்பில் மறுவிசாரணை</u>**

தாவா சொத்திற்கு எதன் அடிப்படையில் காந்திமதி பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்றால் 1980 க்கு முன்னால் பெயர் மாற்றம் செய்யப்பட்டததால் அதை என்னால் கூற முடியவில்லை.

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.10 14:51:58 +0530